# தமிழ்நாடு அரசு
# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
# வட்டாட்சியர் அலுவலகம், திருவேங்கடம் வட்டம், தென்காசி மாவட்டம்

அறிவிக்கை எண்:550-2025அ2(2/2025) நாள்:09.10.2025

தென்காசி மாவட்டம், திருவேங்கடம் வட்டத்தில் காலியாகவுள்ள கிராம உதவியாளர் பணியிடத்தை நிரப்பிட இவ்வலுவலக அறிவிக்கை எண்.01/2025 நாள்.11.07.2025ன்படி விண்ணப்பங்கள் பெறப்பட்டு வாசித்தல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பு பணி 17.09.2025 அன்று நடைபெற்றது. இந்நிலையில் தற்போது சென்னை கூடுதல் தலைமை செயலர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண் ந.க.வ.தி2(2)02.28/01/2024 நாள்.22.09.2025ன்படி கிராம உதவியாளர் பதவிக்கான உச்சபட்ச வயது வரம்பு உயர்த்தி கடிதம் வரப்பெற்றுள்ளதன் பேரில் தகுதியுள்ள விண்ணப்பதாரர் களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. [குறிப்பு இவ்வலுவலக அறிவிக்கை எண்.1/2025 நாள். 11.07.2025ன்படி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள மற்றும் வாசித்தல், சான்றிதழ் சரிபார்ப்பிற்கு வருகைபுரிந்த விண்ணப்பதாரர்கள் தற்போது விண்ணப்பிக்க தேவையில்லை] விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப படிவங்களை https://tenkasi.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். கீழ்க்காணும் காலிப் பணியிடத்திற்கான விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் பூர்த்தி செய்து **10.10.2025 முதல் 24.10.2025 மாலை 05.45 மணிக்குள் திருவேங்கடம் வட்டாட்சியர் அலுவலகத்தில்** கிடைக்கப்பெறும் வகையில் விண்ணப்பம் செய்ய வேண்டும். நேரம் கடந்து வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.

| | |
|---|---|
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் Level 6 (ரூ.11,100 - 35,100/-) |
| வட்டத்தின் பெயர் | திருவேங்கடம் |
| காலிப்பணியிடம் - 01 | 11, சங்குப்பட்டி - கிராமம் |

**2.இனச்சுழற்சி விபரம்**

| வ. எண். | இனச்சுழற்சி எண் | வகுப்பு | பொது/ பெண் | முன்னுரிமை பெற்றவர்/ முன்னுரிமை அற்றவர் | இடஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|
| 1. | 07 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (Most Backward Class and Denotified Community) | பெண் | முன்னுரிமை அற்றவர் | ஆதரவற்ற விதவை |

**3.வயது 01.07.2025 தேதிப்படி வயது கணக்கிடப்படும்**

| வ.எண். | பிரிவு | குறைந்தபட்ச வயது வரம்பு | அதிகபட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1. | பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் - ஆதரவற்ற விதவை | 21 | 42 |
| | மாற்றுத்திறனாளிகள் நிர்ணயிக்கப்பட்ட வயதிலிருந்து 10 ஆண்டுகள் விதிதளர்வு | | |
| கல்வித் தகுதி | தமிழ்நாடு அரசு தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்பு தேர்வில் (SSLC-Secondary School leaving certificate Examination) தமிழை ஒரு பாடமாக கொண்டு எழுதப்பட்டிருக்க வேண்டும். மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். (குறைந்தபட்ச கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு தோல்வி) | | |

**இதர தகுதிகள் நிபந்தனைகள்**

இருசக்கர வாகனம் ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும் மற்றும் இவ்வலுவலக அறிவிக்கை எண் 01/2025 நாள். 11.07.2025ல் குறிப்பிட்டுள்ள தகுதிகள் மற்றும் நிபந்தனைகள்

**வருவாய் வட்டாட்சியர்,**
திருவேங்கடம்